## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

# புதிய அறிவிப்புகள்

## 2009 - 2010 ஆம் நிதியாண்டிற்கான புதிய அறிவிப்புகள்

**1. உணவு பதப்படுத்துதல், பிளாஸ்டிக் மற்றும் இரப்பர் இனங்களில் ஈடுபட்டுள்ள தொழில்களுக்கு சிறப்பு வகை மூலதன மானியம் வழங்குதல்.**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையில் தமிழ்நாட்டில், எப்பகுதியிலும் அமைக்கப்படும் 10 வகையான சிறப்பு வகை உற்பத்தி இனங்களில் ஈடுபடும் தொழில் நிறுவனங்களுக்கு, இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு, அதிக பட்சமாக ரூ.30 லட்சம் வரை சிறப்பு முதலீட்டு மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சிறப்பு வகை உற்பத்தி இன பட்டியலில் 1) உணவு பதப்படுத்துதல், 2) பிளாஸ்டிக் மற்றும் 3) இரப்பர் தொழில்களையும் சேர்த்து சிறப்பு சலுகையை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2. தாய்கோ வங்கியின் புதிய கிளைகள் திறக்கப்படுதல்.**

நடப்பு நிதியாண்டில் (2009–10) தூத்துக்குடி, ஒட்டன்சத்திரம், திருவொற்றியூர், கும்பகோணம் மற்றும் பொள்ளாச்சி ஆகிய இடங்களில் தாய்கோ வங்கியின் புதிய கிளைகள் துவங்கப்படும்.

**3. புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்குதல்.**

நடப்பு நிதி ஆண்டில் 1) திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டம், 2) திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மற்றும் 3) வடமதுரை, 4) கரூர் மாவட்டம் நெரூர் வடபாகம், 5) திருப்பூர் மாவட்டம் சடையபாளையம், 6) திருவள்ளூர் மாவட்டம் செங்கரை, 7) விருதுநகர் நகர்ப்புறம் மற்றும் 8) விழுப்புரம் மாவட்டம், 'ஏ' சாத்தனூர் ஆகிய 8 இடங்களில் குறு மற்றும் சிறு தொழில்களை மேலும் ஊக்குவிக்க புதிய தொழிற்பேட்டைகள், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மூலமாக துவங்க பூர்வாங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

**4. குறுந்தொழில் நிறுவனங்களுக்கென தனியாக தொழிற்பேட்டைகள் உருவாக்குதல்.**

குறைந்த முதலீட்டில் அதிக அளவு வேலைவாய்ப்பினை உருவாக்க வல்ல குறுந்தொழில்களை இந்த அரசு ஊக்குவித்து, அதன் மூலம் அப்பகுதிகளில் உள்ள மக்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்த வழிவகை செய்து வருகின்றது. இந்த முயற்சியில் மேலும் ஒரு மைல் கல்லாக, குறுந்தொழில் நிறுவனங்களுக்கென பிரத்யேக தொழிற்பேட்டைகளை உருவாக்கும் முயற்சியில், இந்த அரசு 2009–10ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய பெருநகர் பகுதிகளில் (Tier - II Cities), தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மூலமாக புதிய குறுந் தொழிற்பேட்டைகளை உருவாக்க பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. **டான்சி நிறுவனத்தின் மேம்பாட்டுப் பணிகள்**

பெரும் நட்டத்தில் இயங்கி நலிவடைந்து, மூடும் நிலைக்கு வந்த டான்சி நிறுவனமானது, இந்த அரசு எடுத்த பல்வேறு நிதிச்சீரமைப்பு நடவடிக்கைகளின் பலனாக, தற்போது புதுப்பொலிவுடன் செயல்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுகளாக டான்சியின் செயல்பாட்டில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிறுவனத்தை மேலும் திறம்பட செயல்படுத்த நடப்பாண்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- ஈரோடு, நாமக்கல், பொள்ளாச்சி, திருப்பூர், மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 இடங்களில் கடந்த காலங்களில் மூடப்பட்ட இந்நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்கூடங்கள் மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ள இந்நிறுவன உற்பத்திக்கூட வளாகங்களில் விற்பனைக் காட்சியகங்கள் புதியதாக திறக்கப்படும்.
- இந்நிறுவனத்தில் காலியாக உள்ள 70 பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் உடனடியாக நிரப்பப்படும்.

**6. விருதாச்சலத்தில் உள்ள, அரசு பீங்கான் தொழில் நுட்ப பயிலகத்தை மேம்படுத்துதல்.**

விருதாச்சலத்தில் உள்ள, அரசு பீங்கான் தொழில் நுட்ப பயிலகம் மேலும் சிறப்புடன் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கபடும்.

**7. தரமான உற்பத்திப் பொருட்கள் கொள்முதல் செய்வது தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி அளித்தல்.**

திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் உள்ள மத்திய மின்பரிசோதனை ஆய்வுக்கூடம் மற்றும் சென்னையிலுள்ள இரசாயன பரிசோதனை மையம் வாயிலாக, மாவட்டம் வாரியாக உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தரமான உற்பத்திப் பொருட்கள் கொள்முதல் செய்வது தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்படும்.

**8. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை குறித்த கருத்தரங்குகள் நடத்துதல்.**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையில் குறிப்பிட்டுள்ள மான்ய பலன்களை தொழில் முனைவோருக்கு எடுத்துரைத்து தொழில் துவங்க ஊக்குவிக்க மாவட்டம் தோறும் கருத்தரங்குகள் நடத்தப்படும்.

**பொங்கலூர் நா.பழனிசாமி**
**ஊரகத் தொழில்**
**மற்றும்**
**கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்**